## தொன்போஸ்கோ அன்பு இல்லம்

## 1992-93 ஆண்டறிக்கை.

பல்வேறு காரணங்களால் ஏராளமான சிறுவர்கள் தங்களது பெற்றோரையும் வீட்டையும் விட்டு தெருவிலே வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களை நல்வழிப்படுத்துவதற்காக தொடங்கப்பட்டதுதான் தொன்போஸ்கோ அன்பு இல்லம். இவ்வில்லம் தமது பணியை சேலம் நகரிலே சென்ற நான்கு ஆண்டுகளாக சிறப்புடன் நடத்திவிட்டு ஐந்தாவது ஆண்டில் கால் எடுத்து வைத்துள்ளது.

இவ்வில்லத்தின் இரண்டாவது இயக்குனர் அருட்தந்தை தாமஸ் மைக்கேல் மேற்படிப்புக்காக பெங்களூர் சென்றதால் அருட் திரு எட்வர்ட் சேவியர் அன்பு இல்லத்தின் மூன்றாவது இயக்குநராக 7.6.1992, பரிசுத்த ஆவியின் பெருவிழா வன்று பொறுப்பு எடுத்தார்.

### உடன் உழைப்பாளர்கள்:

தொன்போஸ்கோ அன்பு இல்லத்தின் பணியை இயக்குநருடன் பலரும் சேர்ந்து பகிர்ந்துக்கொள்ளுகின்றனர். அருட்சகோதரர் அமல ஜெயராயன் உதவி இயக்குநராக பணியாற்றுகிறார். திரு.ஜோசப் ஆசிரியர் சென்ற மூன்று ஆண்டுகளாக பகுதிநேர ஆசிரியராக பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. திரு.சைமன், திரு. இருதயராஜ் முழுநேர உடன் உழைப்பாளிகளாக பணியாற்றுகின்றனர். திரு.கார்த்திக், திரு. ரமேஷ் என்ற சிதைபொருள் சேகரிப்பவர்கள் பகுதிநேர உடன் உழைப்பாளிகளாக பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டு உதவி இயக்குநராக பணியாற்றிய அருட் சகோதரர் வின்சென்ட் தம்புராஜ் மற்றும் அருட்சகோதரர் அருட்தாஸ் படிப்புக்காக முறையே பெங்களூர்,சென்னை சென்றனர்.

### பெயர் மாற்றம்:

இதுவரையும் சிதைபொருள் சேகரிப்போர் நல்வாழ்வுத்திட்டமாக செயல் புரிந்து வந்த தொன்போஸ்கோ அன்பு இல்லத்தை இவ்வருடம் தெருவாழ் சிறுவர்கள் நல்வாழ்வு மையம் என்று பலவிதமான வேலைகளை செய்து தெருக்களில் வாழ்ந்துவரும் எல்லா சிறுவர்களுக்கும் பயன்படும்படி செய்யப்பட்டுள்ளது.

### மறுவாழ்வின் பத்து அம்சங்கள்:

தொன்போஸ்கோ அன்பு இல்லத்தின் குறிக்கோளை அடைய பத்து அம்சங்கள் கொண்ட திட்டம் அமுல் செய்யப்பட்டது. அதன்படி இந்த வருடம் 28 சிறுவர்கள் தங்களது குடும்பத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிலரின் பெற்றோர் வந்து அழைத்துச்

சென்றனர். சிலரை அன்பு இல்லத்திலிருந்து அழைத்து வீட்டில் சேர்த்து விடப்பட்டது. அப்போது பெற்றோர் அடையும் மகிழ்ச்சியை எடுத்துச் சொல்ல வார்த்தை இல்லை.

இவ்வருடம் டொன்போஸ்கோ அன்பு இல்லத்திற்கு வந்து ஒருநாளாவது தங்கி, குளித்துவிட்டு, துணிகளை பெற்று சென்றவர்கள், மற்றும் உடன் உழைப்பாளிகளால் தொடர்பு கொண்டது சுமார் 500 தெருவாழ் சிறுவர்கள் என்றால் மிகையாகாது.

பல நல்ல உள்ளம் படைத்தவர்களின் உதவியோடு 18 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. ஆனால் பெரும்பாலோர் நிலைத்து நிற்கவில்லை.

அடிப்படைக்கல்வி அளிக்கப்படுகிறது. தினமும் கட்டாய கல்வியாக மாலை 6 முதல் 7.30 மணி வரை எழுத, வாசிக்க மற்றும் கணிதம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. நல்ல ஒழுக்கமும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மூன்று பேரை போர்டிங் பள்ளிகளுக்கு அனுப்பி இருவர் வந்துவிட்டனர். அடுத்த ஆண்டு தொடர்ந்து முயற்சி செய்து கல்வி அறிவு கொடுக்கப்படும். எனவே வருகின்ற ஆண்டு பலரும் 5வது [8வது] வகுப்பு தேர்வுகள் எழுதுகிறார்கள்.

புனித மரியன்னை மருத்துவ மனையின் துணையுடன் இவ்வருடம் 9பேருக்கு நீண்ட நாள் மருத்துவ உதவியும் 22 பேருக்கு குறுகிய கால மருத்துவ உதவியும் கொடுக்கப்பட்டது.

சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கையை முன்னிட்டு சிறுசேமிப்புத் திட்டம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ஆரம்பித்து இதுவரை 33 பேர் பணம் சேர்த்துள்ளனர். மூன்று பேர் சிறு சேமிப்பிலிருந்து ரிக்கரிங் சேமிப்பில் சேர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## புதியபாதை:

எமது சிறுவர்களின் வாழ்க்கையை ஒழுங்குப்படுத்தி சீரமைப்பதற்காக 'புதிய பாதை' என்றதொரு திட்டம் கையாளப்பட்டது. இதைத் தினமும் பூர்த்தி செய்வார்கள். ஒவ்வொரு சிறுவனும் தன்னுடைய பழைய கெட்ட பழக்கங்களை தானாகவே கைவிட இது உதவுகிறது. அனைவரையும் நல்ல இந்திய குடிமகனாகவும், உண்மையுள்ளவனாகவும் மாற்ற இது உதவுகிறது.

## பயிற்சி இல்லம்:

இவ்வருடம் திருப்பத்தூர் நாயகஞ்சக்கல்லூரியில் 3 பேர் நிலைப்
[illegible]

## புதுப்பிக்கப்பட்ட இல்லம்:

சிறுவர்கள் முன்பு தங்கியிருந்த கட்டடம் காற்றோட்ட வசதியில்லாததால் சுமார் 4 லட்சம் ரூபாய் செலவு செய்து புதுப்பிக்கப்பட்டது. அதனை முன்னாள் இயக்குநர் அருட் சகோதரர் மொரிஸ் அவர்கள் 31.1.93 அன்று திறந்து வைத்தார். சலேசிய மாநில தலைவர் அருட் தந்தை வின்சென்ட் துரைராஜ், புனிதப்படுத்தினார். விழாவுக்கு சுமார் 65 குருக்கள் துறவியரும் 60க்கு மேல் உபகாரிகளும் வெளிதெருவோர சிறுவர்களும் வந்திருந்தனர். தற்போது புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தில் சிறியவர் பெரியவர் தங்க தனி இடவசதி உள்ளது.

## உல்லாச பயணம்:

இவ்வாண்டின் சிறப்பு அம்சமாக உல்லாச பயணம் நடத்தப்பட்டது. ஆண்டுதோறும் கோடை முகாம் பத்து நாட்கள் நடத்தப்படும். ஆனால் இவ்வாண்டு கல்வி பயணமாக திருச்சி, தஞ்சாவூர், வேளாங்கண்ணி, சிவகங்கை, இராமேஸ்வரம், மதுரை, குற்றாலம், நாகர்கோவில், கன்னியாகுமரி மற்றும் பல இடங்களுக்கு சென்றனர். இப்பணத்தின் நீங்காநினைவுகள் எமது சிறுவர்களின் மனதில் இன்றும் இருக்கின்றது. இப்பயணத்திற்கு உதவிய சலேசிய இல்லங்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி.

இவ்வருடம் ஒருநாள் உல்லாசபயணமாக மேட்டூர், சேலம் மிருக காட்சிசாலை, ஏற்காடு ஆகிய இடங்களுக்கு மாணவர் சென்று வந்தனர்.

## அரசின் பங்கு:

எமது நிறுவனம் தனியார் நடத்துவதாக இருப்பினும் அரசும் இவ் வில்லத்திற்குப் பல உதவிகளை புரிந்துள்ளது. காவல்துறை மேல்கண்காணிப்பாளர் திரு. சுப்ரமணியன் அவர்கள் இல்லத்திற்கு வருகை தந்து ஒத்துழைப்பை கொடுப்பதாக உறுதி கூறிவிட்டு, அஸ்தம்பட்டி காவல் ஆய்வாளர் வழியாக வேண்டிய காலத்தில் வேண்டிய உதவி செய்கிறார்கள்.

மேலும் மாவட்ட ஆட்சியாளரின் ஆணைக்கு ஏற்ப மாவட்ட இணை ஆட்சியாளர் திரு. வர்மா அவர்கள் வருகை புரிந்து குறைகளை கேட்டது எங்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுக்கிறது.

...4.